கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

முன்னிலை: திரு.ஜி.சரண்,B.L., P.G.Dip.in Env.Law.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல் (முழு கூடுதல் பொறுப்பு)

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் நாள் சனிக்கிழமை.

இ.எ எண்.02/2024 (உள்) நிறைவேற்றுகை எண்.190/2023.

1.சி.கார்த்திக்.

2.சி.பழனியம்மாள். ...மனுதாரர்கள்/மனுதாரர்கள்/ தீர்ப்பாணை பெற்றவர்கள்.

...எதிர்...

பி.சௌந்தரபாண்டியன். ...எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/தீர்ப்புக்கடனாளி.

இந்த இடைக்கால மனு கடந்த 20.12.2024 ம் தேதியன்று இந்த நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள்/மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.ராமர் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/தீர்ப்புக்கடனாளி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.ரஞ்சித்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, இது நாள் வரையிலும் இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த மனுவில் இன்று இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்

உத்தரவு

1. வழக்கின் நிறைவேற்றுகை மனுவின் முதல் பக்கத்தில் கீழிருந்து மேலாக கடைசியில் எதிர்மனுதாரர் முகவரியில் "தற்காலிக முகவரி :– கலைமகள் காலனி, வனகாளியம்மன் கோவில் பின்புறம், சேரன் மெட்ரிகுலேஷன் பள்ளி அருகில், கலிக்கம்பட்டி அஞ்சல், திண்டுக்கல்– 624303" என்று சேர்த்து திருத்தம் செய்ய அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி மனுதாரர்கள்/மனுதாரர்கள்/ தீர்ப்பாணை பெற்றவர்களால் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17–ன்படி இம்மனு மனுதாரர்கள்/மனுதாரர்கள்/ தீர்ப்பாணை பெற்றவர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்கள்/மனுதாரர்கள்/ தீர்ப்பாணை பெற்றவர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u>:

மனுவின் 1ம் மனுதாரர் தீர்ப்பாணை பெற்றவர். தாவா நிறைவேற்றுகை மனுவின் 2ம் மனுதாரருக்கும் சேர்த்து இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/தீர்ப்புக்கடனாளியிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய தொகையினை வசூல் செய்து தரக்கோரி நிறைவேற்றுகை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா நிறைவேற்றுகை மனுவினை இந்த மனுவின் ஒரு அங்கமாக பாவித்துக் கொள்ள வேண்டும். தாவா நிறைவேற்றுகை மனுவில் எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/தீர்ப்புக்கடனாளிக்கு பலமுறை அவருடைய நிரந்தர முகவரிக்கு இந்த நீதிமன்றம் மூலம் அறிவிப்புகள் அனுப்பப்பட்டு அவருக்கு சார்வு செய்ய இயலவில்லை. எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/தீர்ப்புக்கடனாளி தற்சமயம் வேறு ஒரு முகவரியில் தற்காலிகமாக வசித்து வரும் விவரம் மனுதாரர்களுக்கு தற்போது தான் தெரிய வந்தது. எனவே எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/தீர்ப்புக்கடனாளிக்கு அறிவிப்பு அனுப்புவதற்கு அவருடைய தற்காலிக முகவரியை தாவா நிறைவேற்றுகை மனுவில் சேர்த்து திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. தாவா நிறைவேற்றுகை மனுவின் முதல் பக்கத்தில் கீழிருந்து மேலாக கடைசியில் எதிர்மனுதாரர் முகவரியில் "தற்காலிக முகவரி :- கலைமகள் காலனி, வனகாளியம்மன் கோவில் பின்புறம், சேரன் மெட்ரிகுலேஷன் பள்ளி அருகில், கலிக்கம்பட்டி அஞ்சல், திண்டுக்கல்- 624303" என்று சேர்த்து திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி பிழை தெய்வாதீனமாக ஏற்பட்டதாகவும், மேற்கண்ட திருத்தங்களை நிறைவேற்றுகை மனுவில் செய்யாவிட்டால் மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாது இழப்பும், பெருத்த இன்னலும் ஏற்படும். எனவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/தீர்ப்புக்கடனாளி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மெமோவின் சுருக்கம்:

மனுதாரர்கள்/மனுதாரர்கள்/ தீர்ப்பாணை பெற்றவர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்டுள்ள சங்கதிகள் யாரும் உண்மைக்கு புறம்பானதாகும். தாவா மனுவில் பாரா 2 மற்றும் 3ல் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்படுகிறது. மனுதாரர்கள் பொய்யான சங்கதிகளை கொண்டு இந்த மனுவினை தாக்கல்

செய்துள்ளனர். நிறைவேற்றுகை மனுவில் இந்த எதிர்மனுதாரரின் முகவரி திருத்தம் செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு ஏற்புடையதல்ல. மனுதாரர்கள் அம்பாத்துரை காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் கூறியுள்ள முகவரியில் தான் தற்போதும் இந்த எதிர்மனுதாரர் வசித்து வருகின்றார். அதன் பின்பு தற்போது ஏதோ ஒரு முகவரியினை குறிப்பிட்டு அதிலும் செட்டியபட்டிக்கு பதிலாக கலிக்கம்பட்டி அஞ்சல் என்று கூறி, அதில் உள்ள பின்கோடு 624303 என்று குறிப்பிட்டு அதன் சரியான பின்கோடு எண்.624302 என்று சரி செய்துள்ளார்கள். எனவே இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டது. இனி இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?என்பதேயாகும்.

5. மனுவானது உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 6 விதி 17–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

6. இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்கள்/மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தாவா நிறைவேற்றுகை மனுவில் எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/தீர்ப்புக்கடனாளிக்கு பலமுறை அவருடைய நிரந்தர முகவரிக்கு இந்த நீதிமன்றம் மூலம் அறிவிப்புகள் அனுப்பப்பட்டு அவருக்கு சார்வு செய்ய இயலவில்லை எனவும், எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/தீர்ப்புக்கடனாளி தற்சமயம் வேறு ஒரு முகவரியில் தற்காலிகமாக வசித்து வரும் விவரம் மனுதாரர்களுக்கு தற்போது தான் தெரிய வந்ததால், எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/தீர்ப்புக்கடனாளிக்கு அறிவிப்பு அனுப்புவதற்கு அவருடைய தற்காலிக முகவரியை தாவா நிறைவேற்றுகை மனுவில் சேர்த்து திருத்தம் செய்ய வேண்டியுள்ளது எனவும், தாவா நிறைவேற்றுகை மனுவின் முதல் பக்கத்தில் கீழிருந்து மேலாக கடைசியில் எதிர்மனுதாரர் முகவரியில் "தற்காலிக முகவரி:– கலைமகள் காலனி, வனகாளியம்மன் கோவில் பின்புறம், சேரன் மெட்ரிகுலேஷன் பள்ளி அருகில், கலிக்கம்பட்டி அஞ்சல், திண்டுக்கல்– 624303" என்று சேர்த்து திருத்தம் செய்ய வேண்டியுள்ளது எனவும் எடுத்துரைத்தார்.

7. எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/தீர்ப்புக்கடனாளி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர்கள் பொய்யான சங்கதிகளை கொண்டு இந்த மனுவினை தாக்கல்

செய்துள்ளதாகவும், நிறைவேற்றுகை மனுவில் இந்த எதிர்மனுதாரரின் முகவரி திருத்தம் செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு ஏற்புடையதல்ல எனவும், மனுதாரர்கள் அம்பாத்துரை காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் கூறியுள்ள முகவரியில் தான் தற்போதும் இந்த எதிர்மனுதாரர் வசித்து வருவதாகவும், அதன் பின்பு தற்போது ஏதோ ஒரு முகவரியினை குறிப்பிட்டு அதிலும் செட்டியபட்டிக்கு பதிலாக கலிக்கம்பட்டி அஞ்சல் என்று கூறி, அதில் உள்ள பின்கோடு 624303 என்று குறிப்பிட்டு அதன் சரியான பின்கோடு எண்.624302 என்று சரி செய்துள்ளார்கள் எனவும், எனவே இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் எடுத்துரைத்தார்.

8. மனுதாரர்கள்/மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்களால் எதிர்மனுதாரர்/ எதிர்மனுதாரர்/ தீர்ப்புக்கடனாளியிடமிருந்து வசூலிக்கப்பட்ட வேண்டிய தொகையினை வசூலித்து தரும்படி பரிகாரம் கோரி தாவா நிறைவேற்றுகை மனுவானது இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையிலிருந்து வருகின்றது என்பது வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது தெரியவருகின்றது. மனுதாரர்கள்/மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள் தீர்ப்புக் கடன் தொகையினை எதிர்மனுதாரர்/ எதிர்மனுதாரர்/ தீர்ப்புக்கடனாளியிடமிருந்து வசூலிப்பதற்கு ஒரு வாய்ப்பு அளிப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் கருதி, அதன் அடிப்படையில் இந்த மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் நாளான இன்று திறந்த மன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.01.04 14:49:03 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.
(முழு கூடுதல் பொறுப்பு).

<u>இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.01.04 14:49:13 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.(மு.கூ.பொ.)

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்.
இ.எ.எண்.02/2024 (உள்)
நிறைவேற்றுகை மனு எண்.190/2023
உத்தரவு நாள் 04/01/2025.

| | |
|---|---|
| | கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல். |
| | இ.எ.எண்.02/2024 (உள்) நிறைவேற்றுகை மனு எண்.190/2023 |
| | நாள் 04/01/2025 |
| | திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு பகரப்பட்டது.<br>முடிவாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.<br>G SARAN Digitally signed by G SARAN Date: 2025.01.04 14:49:00 +0530<br>கூடுதல் மாவட்ட நீதிபதி,<br>திண்டுக்கல்.<br>(முழு கூடுதல் பொறுப்பு) |